සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

**மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 06 - 2023**
**Third Term Test - Grade 06 - 2023**

## புவியியல்

நேரம்: 2 மணி.

பெயர்:

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பிற்குள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

01. பாடசாலை அமைந்துள்ள மிகச் சிறிய நிர்வாக அலகு ........................................ ஆகும்.
(மாவட்டம், கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு)

02. தெற்கு திசைக்கும் கிழக்கு திசைக்கும் இடையில் உள்ள உப திசை ......................... ஆகும்.
(அக்கினி மூலை, ஈசான மூலை, வாயு மூலை)

03. பிலிமத்தலாவ ............................................ உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற இடமாகும்.
(பித்தளை பொருட்கள், பாய்கள், முகமூடிகள்)

04. கண்டி நகரத்தில் ............................................... அமைந்துள்ளதால் முக்கியம் பெறுகின்றது.
(தலதா மாளிகை, பீடபூமி, பழைய ராச்சியம்)

05. வானிலை அம்சங்களின் நீண்ட காலத் தொகுப்பு .................................. எனப்படும்.
(வெப்பநிலை. காலநிலை, வானிலை)

- **06 - 10 வரையான கூற்றுக்களுக்கு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

06. மத்திய மாகாணம் மாத்தளை, கண்டி மற்றும் .............................. மாவட்டங்களைக் கொண்டது.

07. இலங்கையின் முதலாவது அதிவேக நெடுஞ்சாலை .................................. ஆகும்.

08. உலகிலேயே மிகப்பெரிய தீவு .................................. ஆகும்.

09. நீராவி ஒடுங்கிய பின் .................................. ஏற்படும்.

10. மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு .............................. மின் குமிழை உபயோகிக்க முடியும்.

- **இலக்கம் 11 - 15 வரை உள்ள வினாக்களுக்கு சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (×) எனவும் அடைப்புக்குள் இடுக.**

11. உயிர்வாயு ஒரு முக்கியமான மாற்று சக்தி மூலாதாரம் ஆகும். ( )
12. வரைபடம் அல்லது திட்டப் படத்தை வரையும் போது திசை மிகவும் முக்கியமானது. ( )
13. வழி மாசடைதல் சிறுநீரக கோளாறுகளை ஏற்படுத்துகின்றது. ( )
14. வழி அமுக்கம் மில்லி பார்களில் அளவிடப்படுகிறது. ( )
15. கனிய வளங்களை நிலத்திலிருந்து பெறுவது சிறந்த பயனாகும். ( )

- **இலக்கம் 16 - 20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

16. புத்தளம் மாவட்டத்தில் உள்ள பங்கதெனிய எந்த உற்பத்திக்கு பிரபலமானது
i. பித்தளை பொருட்கள் ii. ஓடு, கற்கள் iii. பாய்கள் iv. முக முடிகள்

17. அரசினால் வழங்கப்படும் ,லவச சேவை
   i. தபால் சேவை
   ii. போக்குவரத்து சேவை
   iii. தொடர்பாடல் சேவை
   iv. கல்வி சேவை

18. சூரியன் உதிக்கும் திசையை பார்த்து இரு கைகளையும் இரு பக்கமும் நீட்டி நிக்கும் போது எமது இடது கை காட்டும் திசை,
   i. வடக்கு
   ii. தெற்கு
   iii. கிழக்கு
   iv. மேற்கு

19. அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை கொண்ட மாகாணம் எது?
   i. கிழக்கு மாகாணம்
   ii. மத்திய மாகாணம்
   iii. சப்ரகமுவ மாகாணம்
   iv. வட மாகாணம்


20. இலங்கையிலுள்ள இனங்களில் குறைந்த சனத்தொகை கொண்ட இடம்,
   i. சிங்களவர்
   ii. இலங்கைத் தமிழர்
   iii. இந்திய தமிழர்
   iv. முஸ்லிம்கள்

## பகுதி II

- **முதலாம் வினா உட்பட மொத்தம் 5 வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) பின்வரும் இலங்கையின் அமைவிடம் தொடர்பான படத்தினை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

   i. இலக்கம் 1 இனால் காட்டப்பட்டுள்ள கடலை பெயரிடுக. (2 புள்ளி)
   ii. இலக்கம் 2 இனால் காட்டப்பட்டுள்ள விரிகுடா யாது? 2 புள்ளி)
   iii. இலக்கம்3 இனால் குறித்துக் காட்டப்பட்டுள்ள நீரிணைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
   iv. இலக்கம் 4 குறிக்கும் நாடு யாது? (2 புள்ளி)




(ஆ) i. இலங்கை எக்கண்டத்தைச் சேர்ந்தது? (2 புள்ளி)
   ii. இலங்கை அமைந்துள்ள சமுத்திரத்தை குறிப்பிடுக. (2 புள்ளி)
   iii. ஆபிரிக்கா கண்டம் இலங்கைக்கு எத்திசையில் அமைந்துள்ளது? (2 புள்ளி)
   iv. இலங்கையின் அமைவிடமானது எமது நாட்டின் கலாசாரத்தில் தாக்கம் செலுத்தும் விதத்தினை இரண்டு காரணிகள் உதவியுடன் குறிப்பிடுக. (2 புள்ளி)

02. (அ) i. கழிவுப் பொருட்களை அவை உருவாகும் விதத்திற்கேற்ப மூன்று வகைப்படுத்துக. (3 புள்ளி)
   ii. கழிவு பொருட்களை முறையாக அகற்றும் மூன்று வழிமுறைகளை குறிப்பிடுக. (3 புள்ளி)
   iii. கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படும் நீலம் மற்றும் செம்மஞ்சள் நிற தொட்டிகளில் அகற்றப்படும் இரண்டு வகையான கழிவுகளை எழுதுக. (2 புள்ளி)

(ஆ) கழிவுகளின் மூன்று பயன்களை குறிப்பிடவும்.


03. i. நீரின் பயன்கள் மூன்று தருக. (3 புள்ளி)
   ii. நீர் மாசடையும் முறைகள் இரண்டு எழுதுக. (4 புள்ளி)
   iii. விடைத்தாளில் பின்வரும் அட்டவணையைப் பிரதிபண்ணி விடையளிக்கவும். (4 புள்ளி)

| நீர்ப்பற்றாககுறையால் ஏற்படும் பிரச்சினைகள் | நீரைப் பாதுகாக்கும் முறைகள். |
|---|---|
| 1. ........................................................................ | 1. ........................................................................ |
| 2. ........................................................................ | 2. ........................................................................ |

04. கீழே தரப்பட்டுள்ள வரைபடங்களின் உதவியுடன் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.

i. நீர் வட்டத்தின் செயற்பாடுகள் நான்கு குறிப்பிடுக. (4 புள்ளி)

ii. படத்தில் x, y, z என்பவற்றினால் காட்டப்பட்டுள்ள வானிலை மூலகங்களை அளவிடும் கருவிகளை பெயரிடுக. (3 புள்ளி)

X 

Y 

Z 

iii. வானிலை தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய நபர்கள் நால்வரின் பெயர்களை தருக. (4 புள்ளி)

05. i. மகரந்த சேர்க்கைக்கு உதவும் பூச்சியினம் 2 குறிப்பிடுக. (2 புள்ளி)

ii. நோய் பரப்பும் பிராணிகள் இரண்டின் பெயர் எழுதுக. (2 புள்ளி)

iii. (அ) தாவரங்களினால் விலங்குகளுக்கு உள்ள பயன்கள் மூன்று தருக. (3 புள்ளி)

(ஆ) கீழே தரப்பட்டுள்ள விலங்குகளினால் ஏற்படும் பயன்கள் ஒன்று விதம் எழுதுக.

1. செண்பகம்
2. தும்பி
3. மண்புழு
4. வௌவால் (4 புள்ளி)

06. i. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பிரதிபண்ணி தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் விடை எழுதுக.
(குளம், ஆறுகள், வயல்வெளிகள், சாலைகள், காடுகள், பாறைகள், தோட்டங்கள், மலைகள்)

| இயற்கை அம்சங்கள் | மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்கள் |
|---|---|
| .................................................................... | .................................................................... |
| .................................................................... | .................................................................... |
| .................................................................... | .................................................................... |

(4 புள்ளி)

ii. வீட்டில் உபயோகிக்கும் சக்தி மூலங்கள் நான்கு தருக. (2 புள்ளி)

iii. (அ) சக்திக்கான கேள்வி அதிகரித்து செல்வதற்கான காரணங்கள் இரண்டு தருக. (2 புள்ளி)

(ஆ) மின்சக்தி விரயத்தை குறைக்க கூடிய வழிமுறைகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

07. பின்வரும் இலங்கையின் மாவட்ட வரைபடத்தின் உதவியுடன் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

i. (அ) A எழுதினால் காட்டப்பட்டிருக்கும் துறைமுகம் யாது? 1 புள்ளி

(ஆ) அத்துறைமுகத்தை அண்மித்த பிரதேசத்தின் இரண்டு முக்கியத்துவங்களை குறிப்பிடுக. 2 புள்ளி

ii. (அ) B எழுத்தினால் குறிக்கப்பட்டிருக்கும் நகரம் எது? 1 புள்ளி

(ஆ) அந்நகரத்தின் முக்கியத்துவங்கள் இரண்டு தருக? 2 புள்ளி

iii. (அ) C எழுதினால் காட்டப்பட்ட மாவட்டம் யாது? 1 புள்ளி

(ஆ) அம்மாவட்டத்தின் முக்கியத்துவங்கள் இரண்டு எழுதுக? 2 புள்ளி

iv. நிழல் தீட்டப்பட்ட மாகாணத்தின் பெயர் யாது? 1 புள்ளி

v. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மாவட்டத்தினை பெயரிடுக. 1 புள்ளி

